விளம்பர எண். 176.

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## விளம்பரம்/அறிவிக்கை

ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு-1ல் அடங்கிய கீழ் காணும் பதவிகளுக்கான (தேர்வு / பணிக் குறியீடு எண். 004) நேரடி நியமனத்திற்காக 18-12-2008 பிற்பகல் 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### அட்டவணை - 1

**(i) எழுத்துத் தேர்வு மற்றும் (ii) வாய்மொழித்தேர்வு ஆகிய இரு நிலைகளில் தெரிவு நடைபெறவுள்ள பதவிகள்:**

| வ எண் | பதவியின் பெயர் (சம்பள விகிதம்) | பணி | பதவிக் குறியீடு எண் | காலியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகத்தில் உதவிப்பிரிவு அலுவலர் (நிதி மற்றும் சட்டத்துறை நீங்கலாக) (ரூ 6500-200-11,100 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணி | 1072 | 124 |
| 2. | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் உதவிப் பிரிவு அலுவலர் (ரூ 6500-200-11,100 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், | 2201 | 1 |
| 3. | சமூகபாதுகாப்புத் துறையில் நன்னடத்தை அலுவலர் (ரூ 5900-200-9900 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு சமூக பாதுகாப்பு சார்நிலைப்பணி | 1011 | 4 |
| 4. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (ரூ 5500-175-9000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ் நாடு பொது சார்நிலைப் பணி | 1017 | 13 |
| 5. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (உடல் ஊனமுற்றோர்) (ரூ 5500-175-9000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ் நாடு பொது சார்நிலைப் பணி | 2500 | 10 |
| 6. | சார்பதிவாளர் நிலை-II (ரூ 5300-150-8300 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு பதிவுத் துறை சார்நிலைப் பணி | 1071 | 7 (பழங்குடியினருக்கான 4 காலியிடங்கள் உட்பட) |
| 7. | கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் (ரூ 5000-150-8000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணி | 1014 | 100 |
| 8. | உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மற்றும் உள் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளர் (ரூ 5000-150-8000 மாதம் ஒன்றுக்கு) | உள்ளாட்சி நிதி தணிக்கை சார்நிலைப்பணி | 1069 | 151 |
| 9. | வேளாண் விற்பனை மேற்பார்வையாளர் (Supervisor of Agricultural Marketing.) (ரூ 5000-150-8000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு வேளாண் விற்பனை சார்நிலைப் பணி | 1087 | 19 |
| 10. | கூட்டுறவு தணிக்கைத் துறையில் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் (ரூ 4000-100-6000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு கூட்டுறவு தணிக்கை சார்நிலைப்பணி | 1016 | 128 |

| | | | | |
|---|---|---|---|---|
| **11.** | கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் **வருவாய்த்துறையில் உதவியாளர்,** மாவட்ட வாரியாக காலியிடங்களின் எண்ணிக்கை/ பதவிக் குறியீட்டு எண். பின்வருமாறு :-<br><br>அரியலூர் - 17- (ப.கு. 2120)<br>சென்னை - 10- (ப.கு. 1033)<br>கோயம்புத்தூர் -13 - (ப.கு. 1034)<br>கடலூர் -39 - (ப.கு. 1035)<br>தர்மபுரி -29 - (ப.கு. 1036)<br>திண்டுக்கல் -15 - (ப.கு. 1037)<br>ஈரோடு -36 - (ப.கு. 1038)<br>காஞ்சிபுரம் -31 - (ப.கு. 1039)<br>கன்னியாகுமரி -29 - (ப.கு. 1040)<br>கரூர் -25- (ப.கு. 1041)<br>கிருஷ்ணகிரி -36 - (ப.கு.2200)<br>மதுரை - 5 - (ப.கு. 1042)<br>நாகப்பட்டிணம் -17 - (ப.கு. 1043)<br>நாமக்கல் -13 - (ப.கு. 1044)<br>நீலகிரி - 6 - (ப.கு. 1045)<br>பெரம்பலூர் -25 - (ப.கு. 1046)<br>புதுக்கோட்டை - 37 - (ப.கு. 1047)<br>இராமநாதபுரம் - 7 - (ப.கு. 1048)<br>சேலம் - 33 - (ப.கு. 1049)<br>சிவகங்கை - 4 - (ப.கு. 1050)<br>தஞ்சாவூர் - 47 -(ப.கு.1051)<br>திருநெல்வேலி - 34- (ப.கு.1058)<br>தேனி - 6 -(ப.கு.1052)<br>திருவண்ணாமலை - 7- (ப.கு. 1054)<br>திருவாரூர் - 17 -(ப.கு. 1055)<br>திருவள்ளூர் - 21 -(ப.கு. 1053)<br>திருச்சி - 36 -(ப.கு. 1057)<br>தூத்துக்குடி - 17 -(ப.கு. 1056)<br>வேலூர் - 6- (ப.கு. 1059)<br>விழுப்புரம் - 9- (ப.கு. 1060)<br>விருதுநகர் - 10 - (ப.கு. 1061)<br><br>(ரூ 4000-100-6000 மாதம் ஒன்றுக்கு)<br>(ப.கு. - பதவிக்குறியீட்டு எண். ) | தமிழ்நாடு அமைச்சுப்பணி | -- | 637 |
| **12.** | **தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையில் கணக்குப் பிரிவில் தணிக்கை உதவியாளர்** (ரூ4000-100-6000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ் நாடு பொது சார்நிலைப் பணி | 1018 | 19 |

## அட்டவணை -2

### எழுத்துத் தேர்வு மூலமாக மட்டுமே தெரிவு நடைபெறவுள்ள பதவிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **13.** | **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நேர்முக எழுத்தர்** (ரூ 4500-125-7000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 1082 | 8 |
| **14.** | **வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உதவியாளர்** (ரூ 4000-100-6000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அமைச்சுப்பணி | 1030 | 13 |
| 15. | **உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் உதவியாளர்** (ரூ 4000-100-6000 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அமைச்சுப்பணி | 1026 | 16 |
| **16.** | **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் உதவியாளர்** (ரூ. 3625 - 85 - 4900 மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் | 1081 | 41 |

**2. முக்கிய தேதிகள் :-**

| | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | 10 - 11 - 2008 | -- |
| ஆ. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 18 - 12 - 2008 | மாலை 5.45 மணி |
| இ. | எழுத்துத்தேர்வு நடைபெறும் நாள் | 22 - 03 - 2009 | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**3. காலியிடப் பகிர்வு : நியமனங்களுக்கான இட ஒதுக்கீட்டின்படி**

**4. பொது விபரங்கள் :-**

அ.. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே பணி நியமன ஒதுக்கீட்டு விதி பின்பற்றப்படும்.

ஆ. அறிவிக்கப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடப்பதற்கு முன்போ அல்லது தெரிவு நடக்கும் போதோ இருக்கும் காலியிடங்களின் நிலைமைக்கேற்ப காலியிட மதிப்பீட்டில் மாறுதல் செய்யப்படலாம்.

இ. மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான தெரிவு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் பெறப்படும் ஆணைக்குட்பட்டது.

ஈ. தெரிவு செய்ப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே பிரிவைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

உ. ரூ.5,500/-க்கு குறைவான குறும அளவிலான ஊதிய ஏற்ற முறை உள்ள பதவிகளில் 5% காலிப்பணியிடங்கள் முன்னாள் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்படும்.

ஊ. ரூபாய் 4000/-க்கு மிகாத குறும அளவிலான ஊதிய முறையைக் கொண்ட பதவிகளுக்கு, பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட 30 விழுக்காடு இடஒதுக்கீட்டில் 10 விழுக்காடு ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.

எ. உதவிப் பிரிவு அலுவலர் (நிதி மற்றும் சட்டத்துறை நீங்கலாக) பதவியைத் தவிர ஏனைய பதவிகளுக்கு உடல் ஊனமுற்றோருக்காக 3 விழுக்காடு இடஒதுக்கீடு பின்பற்றப்படும். ஒரு குறிப்பிட்ட வகுப்பு மற்றும் உடல் ஊனமுற்றோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிக்கு விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அடுத்த தெரிவிற்கு முன்கொணரப்படும்.

ஏ. <u>உடற்தகுதி சான்றிதழ்</u>

நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ் கண்டவாறு உடற்தகுதி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

| பதவியின் பெயர் | உடற்தகுதிக்கான சான்றிதழ் படிவம் | குறிப்பிடப்பட்ட பார்வையின் தரம் |
|---|---|---|
| நன்னடத்தை அலுவலர் (சமூக பாதுகாப்பு) | செயலாண்மைப் (Executive post) பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் | பார்வையின் தரம் - I |
| இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் | | பார்வையின் தரம் - III அல்லது அதற்கு மேம்பட்டது. |
| கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் | | பார்வையின் தரம் - III |
| சார் பதிவாளர் நிலை -II, வேளாண் விற்பனை மேற்பார்வையாளர் | செயலாண்மை மற்றும் அமைச்சுப்பணி அல்லாத (Other than Executive and Ministerial Post) பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் | பார்வையின் தரம் - III |
| உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மற்றும் உள் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளர், வருவாய்த்துறையில் உதவியாளர், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உதவியாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையில் கணக்குப் பிரிவில் தணிக்கை உதவியாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் உதவியாளர், தலைமை செயலகத்தில் **உதவிப்பிரிவு அலுவலர்** (நிதி மற்றும் சட்டத்துறை நீங்கலாக), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் **உதவிப்பிரிவு அலுவலர் /உதவியாளர்/ நேர்முக எழுத்தர்.** | தமிழ்நாடு அமைச்சுப்பணி, தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணிகளில் அடங்கிய பதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் | பார்வையின் தரம் - III அல்லது அதற்கு மேம்பட்டது. |

**(i) Standard of Vision “Standard -I” is as follows:**

| | |
|---|---|
| Distant vision without glasses | 6/6 each eye |
| Near Vision RE | 0.5 (sn) |
| LE | 0.5(sn) |

**(ii) Standard of vision “Standard –III” / “Standard –III or better” is as follows:-**

| | Better eye. | | Worse eye. |
|---|---|---|---|
| Distant Vision without glasses | 6/9 | **OR** | 6/9 |
| Distant Vision with glasses | 6/6 | | 6/12 |

Candidates with defective vision should produce eye fitness certificate from qualified eye specialist.

ஐ. உடல் ஊனமுற்றவர்கள், தங்கள் ஊனம், தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழு திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இராது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுமத்திடமிருந்து (Medical Board) பெற்று நியமனம் செய்யப்படுவதற்கு முன் அளித்திட வேண்டும்.

ஒ. தெரிவு குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட **90** நாட்களுக்குள் பெறப்படுதல் வேண்டும். **90** நாட்களுக்கு பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் கவனிக்கப்படமாட்டாது.

ஓ. அரசாணை நிலை எண்.206 ப(ம) நி.சீ,(கே)துறை, நாள் 06.11.2008-ல், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர்களுக்கு அளிக்கப்பட்ட 3.5% இடஒதுக்கீடு அரசால் திரும்ப பெறப்பட்டதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குண்டான 30% இடஒதுக்கீட்டில் 3.5% தனிஇடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a)-ஐ கட்டாயமாக நிரப்பி அதற்கு கீழுள்ள கட்டத்தை கருமையாக்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குண்டான அனைத்து சலுகைகள் / விதித்தளர்வுகள் /பலன்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு :

**தேர்வாணையத்தின் பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள், தகவல் சிற்றேடு, OMR விண்ணப்பப்படிவம் ஆகியவற்றில் எங்கெங்கு பி.வ. (பிற்படுத்தப்பட்ட வகுப்பு) என குறிப்பிடப்பட்டுள்ளதோ அதனை பி.வ. (பி.வ.மு. அல்லாதோர்), பி.வ.மு. என்று வாசிக்கவும்.**

**(பி.வ.மு - பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்).**

## 6. தகுதிகள்

(அ) வயது (01- 07-2008 அன்று)

(i) **குறைந்தபட்ச வயது வரம்பு :** 18 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும். (அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும்) (1.7.90 அன்றோ அதற்கு முன்பாகவோ பிறந்திருத்தல் வேண்டும்.)

நன்னடத்தை அலுவலர் (சமூகப்பாதுகாப்புத்துறை) பதவிக்கு-26 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும்.

சார்பதிவாளர் நிலை-II பதவிக்கு 20 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ii) **உச்ச வயது வரம்பு** : 30 வயதினை நிறைவு செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (உடல் ஊனமுற்றோர்) பதவிக்கு உச்ச வயதுவரம்பு 40வருடங்கள் ஆகும்.

நன்னடத்தை அலுவலர் (சமூகப்பாதுகாப்பு துறை) பதவிக்கு உச்ச வயதுவரம்பு 40 வருடங்கள் ஆகும்.

குறிப்பு:

(1) ஆ,தி. ப.கு., மி.பி.வ./சீ.ம.,, பி.வ.(பி.வ.மு. அல்லாதோர்), பி.வ.மு. மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர்களுக்கு நன்னடத்தை அலுவலர் பதவியைத் தவிர பிற பதவிகளுக்கு அதிகபட்ச வயதுவரம்பு இல்லை

(2) அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் 17.,07,2006 மற்றும் அரசாணை எண்.152, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் 18.09.2006 மற்றும் அவற்றை அடுத்து பெறப்பட்ட தெளிவுரைகளின்படி பணிநியமனத் தடை ஆணையால் பாதிக்கப்பட்ட வேலையில்லா இளைஞர்களுக்கும், பணியில் இருப்பவர்களுக்கும் உச்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும்.

(3) மாநில/மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.மு. அல்லாதோர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் ஆகிய சாதிப்பிரிவுகளைச் சாராத மற்ற (i.e.Others) விண்ணப்பதாரர்கள் இப்பபதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

4) டான்சி/IFAD நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்புக்குள்ளான தொழில்நுட்பத் தகுதியுள்ள, மற்றும் தொழில்நுட்பத் தகுதியில்லாத பணியாளர்கள், அரசுக் கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் இதுவரை பணியிலமர்த்தப்படாமலிருப்பவர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு தவிர எல்லா தகுதிகளும் இருக்கும்பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள் (சான்று சமர்ப்பிக்க வேண்டும்) தெரிவு செய்யப்பட்டால் விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு இவர்கள் பொருட்டு அரசால் தளர்த்தப்படும்.

**(ஆ) கல்வித்தகுதி:-**

இவ்வறிவிக்கை நாளான 10-11-2008 அன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் அல்லது அவற்றிற்கு இணையான அல்லது மேற்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**அட்டவணை-1**

| வ எண் | பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி ( 10-11-2008 அன்றுள்ளபடி) |
|---|---|---|
| **1.** | **தலைமை செயலகப்பணியில் உதவிப்பிரிவு அலுவலர்** (நிதி மற்றும் சட்டத்துறை நீங்கலாக) | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு முதுநிலை பட்டம் அல்லது ஒரு இளநிலை பட்டத்துடன் BGL பட்டம் அல்லது இளநிலை பட்டத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் முதல் வகுப்பில் தேர்ச்சி.<br><u>ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.மு. அல்லாதோர்) மற்றும் பி.வ.மு. ஆகியோருக்கு</u> பல்கலைக்கழகமானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு இளநிலை பட்டம் போதுமானது. |
| **2.** | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் **உதவிப் பிரிவு அலுவலர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு முதுநிலை பட்டம் அல்லது ஒரு இளநிலை பட்டத்துடன் BGL பட்டம் அல்லது இளநிலை பட்டத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் முதல் வகுப்பில் தேர்ச்சி.<br><u>ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.மு. அல்லாதோர்) மற்றும் பி.வ.மு. ஆகியோருக்கு</u> பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு இளநிலை பட்டம் போதுமானது. |
| **3.** | **சமூகபாதுகாப்பு சார்நிலைப்பணியில் நன்னடத்தை அலுவலர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Sc., அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம், அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B. Litt. பட்டம். அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt. பட்டம்.<br><u>குறிப்பு</u>:-ஏனைய தகுதிகள் சமமாக இருப்பின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை உடைய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>1. சமூகவியல் அல்லது உளவியலில் பட்டம் பெற்றவர்கள். (Candidates who possess the Degree in Sociology or Psychology.) மேலும் இத்தகுதியும் சமமாக இருப்பின்,<br>2. சமூக நலப்பணியாற்றிய அனுபவம் பெற்றவர்கள் அல்லது சமூகப்பணியில் பட்டயத்துடன் கூடிய சமூகம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த சுகாதாரம் மற்றும் பிற்பாதுகாப்புப் பணியில் அனுபவம் பெற்றவர்கள். (Provided further that other things being equal preference shall be given to those who have practical experience in having done Social Welfare work or who possesses a diploma in social service including experience in social and moral hygiene and aftercare work.) |

| | | |
|---|---|---|
| **4.** | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Com., அல்லது B.Sc., பாடத்தில் பட்டம்; அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம், அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt. பட்டம். |
| **5.** | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்**<br>**(உடல் ஊனமுற்றோர்)** | (அ) பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Com., அல்லது B.Sc., பாடத்தில் பட்டம்; அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம், அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt. பட்டம்.<br>**மற்றும்**<br>ஆ) is a physically handicapped person whose physical disability shall not be less than 40%. PH person who applies for appointment to the Post of Junior Employment Officer –PH, should produce with their application a Medical Certificate obtained from a Medical Officer of the rank not lower than that of the Civil Assistant Surgeon showing the nature of degree of his Physical impairment. |
| **6.** | **சார்பதிவாளர் நிலை-II** | ஏதேனும் ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>ஏனைய தகுதிகள் சமமாக இருப்பின் மேற்குறிப்பிடப்பட்ட தகுதிகளுடன் B.L., பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |
| **7.** | **கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br>அல்லது<br>A Diploma in Rural Services Awarded by the National Council of Rural Higher Education.<br>அல்லது<br>A Diploma of Associate Members of the Institute of Chartered Accountants.<br><br>Other things being equal preference shall be given to the candidates possessing such qualification and in such order as specified below:<br>i) M.A. Degree in Co-operation;or<br>ii) M.Com Degree with Co-operation as one of the subject; or<br>iii) B.A., Degree in Co-operation; or<br>iv) Higher Diploma in Co-operative Management awarded by the Natesan Institute of Co-operative Management, Madras; or Institute of Co-operative Management, Madurai. |

| | | |
|---|---|---|
| **8.** | **உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மற்றும் உள் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Sc., அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B. Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt பட்டம். |
| **9.** | **வேளாண் விற்பனை மேற்பார்வையாளர்** | ஏதேனும் ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>Other things being equal, preference shall be given to those who have passed Government Technical Examination in Book keeping by Higher Grade. |
| **10.** | **கூட்டுறவு தணிக்கைத் துறையில் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்** | B.Com., அல்லது B.A. (Co-operation) அல்லது B.A. (Economics)/ அல்லது B.A. (Corporate Secretaryship) அல்லது சென்னை பல்கலைக்கழகம் அல்லது தமிழ்நாட்டிலுள்ள நிறுவனத்தால் வழங்கப்பட்ட Bachelor of Bank Management பட்டம். |
| **11.** | **வருவாய்த்துறையில் உதவியாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Sc., (தொழிற் கல்வி பாடம் தவிர) (Other than in a Professional Subject) அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt பட்டம். |
| **12.** | **தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையில் கணக்குப் பிரிவில் தணிக்கை உதவியாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு பட்டம். ஏனைய தகுதிகள் சமமாக இருப்பின் வணிகவியலில் பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

## அட்டவணை -2

**எழுத்துத் தேர்வு மூலமாக மட்டுமே தெரிவு நடைபெறவுள்ள பதவிகள்**

| வ எண் | பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி (10-11-2008 அன்றுள்ளபடி) |
|---|---|---|
| **13.** | **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நேர்முக எழுத்தர்** | (i) ஒரு இளநிலைப் பட்டம் (Bachelor's Degree);<br>**மற்றும்**<br>(ii) அரசு தொழில் நுட்பத் தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சுத் தேர்வுகளில் முதுநிலையில் தேர்ச்சி; **மற்றும்**<br>(iii) அரசு தொழில் நுட்பத் தேர்வில் சுருக்கெழுத்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலையில் தேர்ச்சி<br>மேற்குறிப்பிடப்பட்ட வகைகள் **(ii)** மற்றும் **(iii)** -ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பத்தகுதிகளை உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமையின்படி கீழ்க்காணும் தகுதிகளை உடைய விண்ணப்பதாரர்கள், இப்பதவிக்கு தெரிவு செய்ய கருதப்படுவார்கள்.<br>(அ) அரசு தொழில் நுட்பத் தேர்வில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வில் தமிழில் உயர்நிலை மற்றும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வில் ஆங்கிலத்தில் இளநிலையில் தேர்ச்சி.<br>(ஆ) அரசு தொழில் நுட்பத் தேர்வில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வில் ஆங்கிலத்தில் உயர்நிலை மற்றும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வில் தமிழில் இளநிலையில் தேர்ச்சி. |
| **14.** | **வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உதவியாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Sc., அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B. Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt பட்டம். |
| **15.** | **உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் உதவியாளர்** | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட B.A., அல்லது B.Sc., அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L., பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.Litt. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட BBM அல்லது B.Litt பட்டம். |
| **16.** | **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் உதவியாளர்** | பல்கலைக்கழகமானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு இளநிலைப் பட்டம் (Bachelor's Degree) |

(சமமான கல்வித் தகுதி குறித்த விபரங்களுக்கு 'பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' உள்ள பத்தி 9ஐக் காண்க.)

**(இ) தமிழில் தகுதி :-**

விண்ணப்பதாரர்கள் அறிவிக்கை நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள் பத்தி எண். 10ஐக் காண்க.

**6. எழுத்துத் தேர்விற்கான திட்டம் :-**

**(A) For posts mentioned in Table –I at Sl.No.1 to 12 under para – 1 (Interview Posts) (Degree Standard – Objective Type)**

| Subject | Duration | Maximum Marks | Minimum Qualifying Marks for selection |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **Single Paper in** General Knowledge (Degree Std.) (100 items) + General Tamil / General English (SSLC Std.) (100 items) | 3 Hours | 150 + 150 = 300 | 102 |
| Oral Test | -- | 40 | |
| | | **Total 340** | |

**(B) Scheme of Examination for Posts mentioned in Table –II in Sl.No.13 to 16 under para –1 (Non- Interview Posts) (Degree Standard - Objective Type )**

| Subject | Duration | Maximum Marks | Minimum Qualifying Marks for selection |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **Single Paper in** General Knowledge (Degree Std.) (100 items) + General Tamil / General English (SSLC Std.) (100 items) | 3 Hours | 150 + 150 = 300 | 90 |
| | | **Total 300** | |

**Notes:** -

(i) The question papers will be set in two types (i.e.) 1) General Knowledge (100 items) with General Tamil (100 items) and 2) General Knowledge (100 items) with General English (100 items). The candidates are given the option to choose either General Tamil or General English for answering the second 100 items apart from answering the first 100 items on General Knowledge. The candidates should mention in the column 22 of the OMR application form the option (i.e. General Tamil or General English) chosen by them, failing which they will be penalised.

(ii) The questions on "General Knowledge" will be set both in Tamil and in English and the questions on General Tamil and General English will be set in the respective languages.

**The syllabi for the said subjects are published in TNPSC Bulletin as follows**:

| **Sl. No.** | **Subject** | **Page No.** | **Tamil Nadu Public Service Commission Bulletin No. & Date** |
|---|---|---|---|
| 1. | General Knowledge | 490 | No.16, dated 01.08.2004 |
| 2. | General Tamil | 721 | No.11, dated 16.05.2001. |
| 3. | General English | 722 | No.11, dated 16.05.2001 |

The Syllabi have also been made available in the Commission's Website at **www.tnpsc.gov.in**

7. **எழுத்துத்தேர்வு மையங்கள் :-**

தகவல் சிற்றேட்டில், பிற்சேர்க்கை- Iல் பிரிவுகள் A, B, C, D & E-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையங்களில் எழுத்துத் தேர்வு நடை பெறும்.

**குறிப்பு :-**

(1) விண்ணப்பதாரர்கள் ஏதேனும் ஒரு மையத்தினைத் தேர்ந்தெடுத்து அந்த மையத்தில் தேர்வினை எழுத வேண்டும்.
(2) விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய சொந்த செலவிலேயே எழுத்துத் தேர்விற்கு/வாய்மொழித் தேர்விற்கு (தெரிந்தெடுக்கப்பட்டால்) வருகை தர வேண்டும்.
(3) தேர்வு மையத்தை மாற்றக் கோரி வரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
(4) தேர்வு மையத்தின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அல்லது குறைக்கவும் மற்றும் விண்ணப்பதாரர்களை பிற மையத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யவும் தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

8. **விருப்பமுன்னுரிமை வழங்குதல்:-**

எழுத்துத் தேர்வில் தகுதி பெறும் அனைத்து விண்ணப்பதாரர்களிடமிருந்தும் பதவி முன்னுரிமை (புதிய / மாற்று) பெறப்படும். தகவல் சிற்றேட்டில் பகுதி –IIIல் வரிசை எண். 3-ல் காணும் குறிப்பு 1 இத் தெரிவுக்குப் பொருந்தாது.

9. **தெரிவுசெய்யும் முறை:-**

அட்டவணை 1-ல் வரிசை எண்கள் 1 முதல் 12 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு (1) எழுத்துத் தேர்வு (2) நேர்காணல் தேர்வு வடிவில் அமைந்த வாய்மொழித் தேர்வு என்னும் அடுத்தடுத்த இரு நிலைகளில் தெரிவு மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றில் சேர்த்துப் பெறும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலும், அவர்கள் அளிக்கும் பதவி முன்னுரிமை வரிசையின் அடிப்படையிலும், ஒவ்வொரு பதவி/அலகு-க்கும் தனித்தனியே பணிநியமன ஒதுக்கீட்டுவிதியை பின்பற்றி இறுதித் தெரிவு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளில் கட்டாயமாக கலந்துகொள்ளவேண்டும்.

அட்டவணை 2-ல் வரிசை எண்கள் 13 முதல் 16 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குக்கான தெரிவு, விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்டையிலும், அவர்கள் அளிக்கும் பதவி முன்னுரிமை வரிசையின் அடிப்படையிலும், ஒவ்வொரு பதவி/அலகு-க்கும் தனித்தனியே பணிநியமன ஒதுக்கீட்டுவிதியை பின்பற்றியும் தெரிவு செய்யப்படுவார்கள்.

Two separate Rank Lists will be prepared for Interview posts mentioned against Sl.No.1 to 12 under Table – I and Non-Interview posts (Sl.No.13 to 16) under Table – II.

Selection in respect of Non-Interview posts will be taken up after finalising the selection for Interview posts mentioned against Sl.No.1 to 12 excluding those who have been selected for Interview posts.

10. **தேர்வுக்கட்டணம் :** ரூ..100/- (ரூபாய் நூறு மட்டும்)

தேர்வுக் கட்டணம், தலைமை அஞ்சலகங்களின் மூலமாகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அஞ்சலகங்களின் மூலமாகவோ மட்டுமே செலுத்தப்பட வேண்டும். கட்டணம் செலுத்தும் முன் அஞ்சலக அதிகாரிகளிடம் விண்ணப்பத்தை காண்பிக்க வேண்டும். பணம் செலுத்தியதற்கான அஞ்சல் ரசீதினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (மேலும் விவரங்களை, தகவல் சிற்றேட்டின் பகுதி-III இன் கீழுள்ள பத்தி-2லும், தேர்வுக் கட்டண சலுகைகளுக்கு " பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 12-லும் காணலாம்).

**உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களின் குடும்ப வருமானம் எதுவாக இருப்பினும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.**

(Para 12 (b) and condition mentioned against Physically Handicapped persons in para. 12 of the 'Instructions, etc. to candidates' may be ignored.)

<u>குறிப்பு :</u>

அஞ்சல் ரசீது பெறும் பொழுது அஞ்சலகத்திற்கு சேவைக் கட்டணமாக அனைத்து விண்ணப்பதாரர்களும் ரூ.5 (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் அஞ்சல் ரசீது பெறுவத்றகு அஞ்சலகக் கவுண்டரில் உள்ள எழுத்தரிடம் OMR விண்ணப்ப எண்ணை (ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பவர் தவிர) தெரிவிக்க வேண்டும்.

11. <u>விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியவைகள்</u>

தேர்வாணையத்தின் "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 15-லும், மற்றும் தகவல் சிற்றேட்டில் பகுதி-II-இன் கீழ் இனம் 25-லும் குறிப்பிடப்பட்டுள்ளபடி, விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் (அவர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதிகளுக்குரிய ஆதாரங்கள் உட்பட) மற்றும் கட்டண விலக்கு கோரப்படவில்லையெனில், ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) மதிப்புள்ள அஞ்சல் ரசீதினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். <u>**மூலச் சான்றிதழ்களை அனுப்பக்கூடாது**</u>. 'ஆன்லைன்' மூலம் விண்ணப்பிப்பவர்கள் இந்த அறிவிக்கை/விளம்பரத்தின் பத்தி 14 இல் துணை பத்தி 'ஈ' யைப் பார்க்கவும்.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

12. <u>**தடையின்மைச் சான்றிதழ்**</u> **:-**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே மத்திய அரசு அல்லது இந்தியாவில் ஒரு மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது அரசு சார்பு நிறுவனங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் அதுபோன்ற அமைப்புகள் ஆகியவற்றில் (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் <u>**தங்கள் துறைத் தலைவர் மூலமாகவோ அல்லது வேலையளிப்போர் (Employer) மூலமாகவோ விண்ணப்பங்களை அனுப்பத்தேவையில்லை. அதற்குப் பதிலாக தமக்கு வேலையளிப்பவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்துவிட்டு, தேர்வாணையத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்**</u>. எனினும், வேலையளிப்பவரிடமிருந்து "தடையின்மைச் சான்றிதழை" வாய்மொழித் தேர்வின் போதோ/மூலச்சான்றிதழ் சரிபார்ப்பின்போதோ பெற்று அளித்திட வேண்டும். தடையின்மைச் சான்றிதழ் வழங்கிய பிறகு, மற்றும் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர் மீது ஏதாவது குற்ற வழக்கு/ ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டால் அல்லது ஏதாவது தண்டனை வழங்கப்பட்டால் இந்த உண்மையை இத்தகைய விண்ணப்பதாரர்கள் இந்த நியமனம் தொடர்பான பதிவு எண்ணை குறிப்பிட்டு உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

13. <u>**சலுகைகள்**</u>

ஆ.தி., ப.கு., மி.பி.வ./சீ.ம., பி.வ. (பி.வ.மு அல்லாதோர்), பி.வ.மு. மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், 40 வயது பூர்த்தியடையாத பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள், பிணைத் தொழிலாளிகள் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் வயது மற்றும்/அல்லது கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின், <u>"பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்</u>" தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர் சலுகைகள் ஏதேனும் கோருவதானால், அதற்கான சான்றுகளை அளிக்கவேண்டும்.

14, <u>**விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல்:-**</u>

(அ) OMR விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்வதற்குரிய பொது விவரங்கள் அடங்கிய "தகவல் சிற்றேடு" , தேர்வாணையத்தின் , "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" மற்றும் விண்ணப்பம் அனுப்புவதற்கான உறை ஆகியவற்றை தமிழ்நாடு/புதுச்சேரியில் உள்ள ஏதேனும் ஒரு தலைமை அஞ்சலகங்களின் மூலமாகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அஞ்சலகங்கள் (236 அஞ்சலகங்கள்) மூலமாகவோ ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (அஞ்சலகங்களின் பெயர் பட்டியல் தேர்வாணையத்தின் இணைய தளமான **www.tnpsc.gov.in** -ல் உள்ளது).

(ஆ) OMR விண்ணப்பப் படிவத்தை, சென்னை-600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் விற்பனைக் கவுண்டரில் அனைத்து வேலை நாட்களிலும் (பகல் 1.30

மற்றும் 2.00 மணி இடையிலான மதிய உணவு இடைவேளை நேரம் தவிர) விண்ணப்பம் வந்து சேர்வதற்கான கடைசி நாள் மாலை 5.00 மணி வரையில் ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) ரொக்கமாக மட்டும் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். **விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.**

(இ) விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப் படிவத்தை (AD அல்லது தொடர்ந்து வரும் வரிசைகள்) மட்டுமே பயன்படுத்த வேண்டும். தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது ஒளிநகலிடப்பட்ட அல்லது புகைப்பட நகல் எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள், தேர்வாணையைத்தின் **www.tnpsc.gov.in** என்னும் இணையதளத்தில் "ஆன்லைன்" மூலமாக விண்ணப்பிக்கும் வசதியையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்லைனில் பதிவு செய்வதற்கு முன்பாக, ஏதேனும் ஒரு தலைமை அஞ்சலகம்/ தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அஞ்சலகத்திலிருந்து பெறப்பட்ட ரூ. 130/- (அதாவது விண்ணபப்க் கட்டணம் ரூ,30/-, தேர்வுக்கட்டணம் ரூ.100/-)க்குரிய அஞ்சல் ரசீது ஒன்றைத் தயாராக வைத்துக்கொண்டு, விண்ணபதாரர்கள் "ஆன்லைன்" மூலம் விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பதாரர்,, விண்ணப்பக் கட்டணமாக ரூ.30/-க்குரிய அஞ்சல் ரசீதினைத் தயாராக வைத்திருக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம்/தேர்வுக் கட்டணத்திற்குப் பெறப்பட்ட அஞ்சல் ரசீதை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். "ஆன்லைன்" மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இவ்வறிவிக்கை/ விளம்பரம் / தேர்வாணையத்தின், "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்"/ தகவல் சிற்றேட்டில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் பொருந்தும். விண்ணபதாரர் "ஆன்லைனில்" விண்ணப்பிக்கும் பொழுது, (இணையதளத்திலிருந்து விண்ணப்பப்படிவத்தை அச்சிட்டு எடுத்து, கையொப்பமிடப்பட்டு) அஞ்சல் ரசீதுடனும், சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்களுடனும் தேர்வாணையத்தின் அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு விண்ணப்பத்தினை அனுப்பி வைத்திடவேண்டும். தவறினால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். "ஆன்லைன்" மூலம் விண்ணப்பிக்கும் வசதி 16-12-2008 அன்று மாலை 5.45 மணியுடன் முடிவடைகிறது.

15. <u>விண்ணப்பம் பெறுதல்</u> :-

(அ) OMR விண்ணப்பப்படிவத்தை தேர்வாணைய அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்பாகப் பின்வரும் இனங்களையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(i) உறுதிமொழிக்குக் கீழ் விண்ணப்பதாரர், பால்பாயின்ட் பேனாவினால் அல்லது பவுண்டன் பேனாவினால் மட்டும் கையொப்பம் இட வேண்டும். **<u>கையொப்பம் இடப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு உரியதாகும்.</u>**

(ii) OMR விண்ணப்பப்படிவத்தின் கலங்கள் 1, 1(a), 3, 4, 14(d) மற்றும் கலம் 22-ன் கீழுள்ள கட்டாய பாடம் ஆகியவை இந்த அறிவிக்கை/ விளம்பரத்தில் உள்ள விவரங்களின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(iii) OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a) ஆகியவைகளை நிரப்பி அவற்றிற்கு கீழே உள்ள கட்டத்தை கருமையாக்க வேண்டும்.

(iv) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தில் நேர்முக எழுத்தர் பதவிக்கு விண்ணபிப்பவர்கள் OMR விண்ணப்பப்படிவம் கலம் -11 ஐ பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் தட்டச்சு / சுருக்கெழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) <u>நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை- 600 002 எனும் முகவரிக்கு 18-12-2008 அன்று மாலை 5.45 மணிக்கு வெகு முன்னதாகவே கிடைக்குமாறு பதிவஞ்சலில்/ விரைவு அஞ்சலில் அனுப்பி வைத்திடவேண்டும்.</u>

**செயலாளர்.**